இனிமையான குழந்தைகளே! இந்தப் படிப்பு மிக உயர்ந்ததாகும். இதில் மாயா இராவணன் தான் தடைகளை ஏற்படுத்துகிறான். அதிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

கேள்வி: உங்கள் சேவை எப்போது வளர்ச்சி அடையும்?

பதில்: எப்போது சேவை செய்யக் கூடிய குழந்தைகள் நீங்கள் முழுமையான பற்றற்றவராக. சதா யோக நிலையில் இருப்பவராக ஆகிறீர்களோ, அப்போது உங்கள் சேவை வளர்ச்சி அடையும். நீங்கள் அனைவருக்கும் விமோசனம் (விடுதலை) அளிப்பதற்கு நிமித்தமாகி விடுவீர்கள். 2. எப்போது முழு நிச்சய புத்தி உள்ளவராக ஆகிறீர்களோ, எப்போது பாபாவின் ஒவ்வொரு கட்டளை யையும் நடைமுறைப் படுத்துவீர்களோ, அப்போது சேவையில் வெற்றி கிடைக்கும்.

பாடல்: நான் ஒரு சின்னஞ் சிறிய குழந்தை.........

ஓம் சாந்தி. பாபா வந்து சின்னச் சின்னக் குழந்தைகளுக்குத் தான் புரிய வைக்கிறார். சிலர் சிறியவர் களாக உள்ளனர், சிலர் நடுத்தரமாக (இள வயதினர்) உள்ளனர், சிலர் பெரியவர்களாக உள்ளனர். யார் ஞானத்தை நன்கு புரிந்து கொண்டு மற்றவர்களுக்குப் புரிய வைக்க முடியுமோ, அவர்கள் பெரியவர்கள் எனச் சொல்லப் படுகிறார்கள். யார் புரிய வைக்க முடிவதில்லையோ, அவர்கள் சிறியவர்கள் எனச் சொல்லப் படுகிறார்கள். சின்னக் குழந்தை என்றால் பிறகு பதவியும் சிறியதாக இருக்கும். இதுவோ புரிந்து கொள்ள வேண்டிய விஷய மாகும். மனிதர்கள் நதி, ஆறு, குளங்களில் சென்று குளிக்கின்றனர், கும்பமேளா கொண்டாடுகின்றனர். இப்போது கும்பம் என்றால் சங்கமம். சங்கமத்தின் மேளாவோ ஒரு எல்லாவற்றையும் விட பெரியதாகும். அது ஞானக்கடல் மற்றும் ஞான நதியின் சந்திப்பு எனச் சொல்கின்றனர். தண்ணீர் ஓடும் நதிகளோ அநேகம் உள்ளன. அவை களும் கூட கடலில் தான் போய்ச் சேர்கின்றன. ஆனால் அவற்றிற்கு இவ்வளவு மேளா நடைபெறு வதில்லை. பிரம்மபுத்திரா நதி பெரியதாகும். அது கல்கத்தாவின் பக்கம் கடலில் சென்று சங்கமிக் கிறது. அதே போல் சரஸ்வதி, கங்கா முதலிய அநேக நதிகள் உள்ளன. அவை கடலை நோக்கிச் செல்கின்றன. நதிகளால் பிறகு குளம் முதலியவை உருவாகின்றன. ஆக, குழந்தைகள் அறிந்துள்ளனர், ஞானக்கடலாக இருப்பவர் ஒரு சிவபாபா. இந்த பிரம்மாவும் கூட ஞான நதி ஆகிறார். இவருடைய மற்றும் ஞானக்கடலினுடைய மேளா (சந்திப்பு) நடைபெறுகின்றது. உண்மையில் இது தான் உண்மையான கும்ப மேளா எனச் சொல்லப்படுகின்றது. அனைத்திலும் பெரிய மேளா இங்கே ஞானக்கடலிடம் வருவதாகும். இந்த பிரம்ம புத்திரா, பெரியதிலும் பெரிய தொரு நதியாகும். முதல்-முதலில் இவர் (பிரம்மா பாபா) வெளிப்பட்டுள்ளார், ஆக, ஞானக்கடலில் இருந்து முதலில் இந்த பிரம்மா வெளிப்பட்டுள்ளார். இவருடையதே சங்கமயுகம், பிறகு சத்யுகத்தில் முதல் நம்பரிலும் இவரே செல்கிறார். சரஸ்வதி மற்றும் பிரம்மாவின் மேளா கிடையாது. பிரம்மபுத்திரா (பிரம்மா) மற்றும் கடலின் (சிவபாபாவின்) மேளா ஆகும். மனிதர்கள் கும்பமேளாவுக்குச் செல்கின்றனர், அங்கே சென்று குளிக்கின்றனர். நதிகளோ அநேகம் கடலோடு சந்திக்கின்றன. இங்கே எவ்வளவு ஞான நதிகள் அனைவரும் வந்து கடலோடு சந்திக்கின்றனர்! பாபா மிக நன்றாகவே புரிய வைத்துள்ளார். தினந்தோறும் நதிகளில் குளித்துக்

கொண்டிருக் கின்றனர், அதிலிருந்து (பாவ உலகத்திலிருந்து) காப்பாற்றுவது யார்? பாபா சொல்கிறார், இவை ஒன்றும் ஞான கங்கைகள் கிடையாது. இவற்றிலோ மீன்கள், ஆமைகள் அனைத்தும் குளிக் கின்றன. யார் தினந்தோறும் நதிகளில் குளிக்கச் செல் கின்றனரோ, அவர்களுக்குச் சொல்லிப் புரிய வைக்க வேண்டும் - நீங்கள் இதைச் செய்து-செய்து ஏழைகளாக ஆகி விட்டிருக்கிறீர்கள். தீர்த்த யாத்திரைகளில் மனிதர்கள் அதிகம் செலவு செய்கின்றனர். இங்கே செலவின் விஷயமோ கிடையாது. நான் எப்போது வருகிறேனோ, வந்து அனைவருக்கும் சத்கதி அளிக்கிறேன். ஞானம் கொடுக்கிறேன். என்ன ஞானம்? மன்மனாபவ. என்னை நினைவு செய்வீர்களானால் இந்த நினைவின் யோக அக்னியினால் உங்களுடைய விகர்மங்கள் விநாசமாகி விடும். நீங்கள் தூய்மையாகி விடுவீர்கள். யோகத்தின் மூலம் தான் நீங்கள் தூய்மையாக முடியும். தண்ணீரில் குளிப்பதனால் அல்ல. உண்மையில் இது ஞான ஸ்நான மாகும். அவை தண்ணீரின் நதிகள், இவர்கள் ஞான நதிகள். இதில் பாபாவை நினைவு செய்ய வேண்டும், அவ்வளவு தான். இதை ஸ்நானம் என்று கூடச் சொல்ல வேண்டியதில்லை. இதுவோ பாபா வழிமுறை தரு கிறார். ஞானத்தினால் சத்கதி ஏற்படுகின்றது. நீங்கள் 21 பிறவிகளுக்கு சத்கதியில் சென்று பிறகு துர்கதியில் கீழே இறங்குகிறீர்கள். சதோபிரதானத்தில் இருந்து சதோ, ரஜோ தமோவில் அவசியம் வந்தாக வேண்டும். இந்த அனைத்து விஷயங்களையும் குழந்தைகள் நீங்கள் தான் புரிந்து கொள் கிறீர்கள். மேலும் இங்கே குழந்தைகள் தான் வருகின்றனர், புத்துணர்ச்சி பெறுவதற்காக. மற்றப்படி புதியவர்கள் யாரும் வர முடியாது.

பாபா சொல்கிறார் - நான் குழந்தைகளின் முன்பாகத் தான் வருகிறேன். இவரோ மறைவாக உள்ள அம்மா ஆகிறார். குழந்தைகள் நீங்கள் யார் மூலமாவது கண்காட்சி மேளாவின் திறப்பு விழா செய்விக்கிறீர்கள் என்றால் அவர்களுக்குக் கொஞ்சம் புரிய வைத்துப் பிறகு திறக்குமாறு செய்விக்க வேண்டும். அவர்கள் ஏதாவது தலைகீழாகப் பேசிவிடக் கூடாது. இதுவோ, அவர்களை புரிய வைப்பதற்காக வேறு வழி இன்றி செய்யப்படுவதாகும். கொஞ்சம் புரிந்து கொள்வார்களானால் அவர்கள் சொல்ல முடியும், இது மிக நல்ல நிறுவனம் (இயக்கம்) என்றும் மனிதரில் இருந்து தேவதை ஆக்கக் கூடியது என்று. ஆனால் இந்த அளவுக்கு யாரும் புரிய வைப்பதில்லை. யாருடைய புத்தியிலும் பதிவதும் இல்லை. யார்-யார் மூலமாகத் திறப்பு விழா நடத்தப் பட்டுள்ளதோ, அவர்கள் எந்த ஒரு விஷயத்தையும் புரிந்து கொள்ளவில்லை. யாருக்கும் நிச்சயம் ஏற்படவில்லை. இவ்வளவு பேர் வந்துள்ளனர் என்றால் அவர்களிலும் கூட சிலருக்கு அரைகுறை நிச்சயம் என்று தான் சொல்வார்கள். அவர்கள் பிறகு வந்து ஏதேனும் புரிந்து கொள்வதற்கு முயற்சி செய்கின்றனர். ஆயிரக் கணக்கில் புரிந்து கொள்வதற்காக வருகின்றனர். அவர்களுக்குள் 5-7 பேர் வெளிப்படுகின்றனர். அதனால் கோடியில் சிலர் எனச் சொல்லப்படுகின்றது. யாராவது கண்காட்சி மேளா முதலியவற்றை நடத்துகின்றனர் என்றால் 5-6 பேர் வெளிவருகின்றனர். இல்லை யென்றால் சிலர் வருவது கஷ்டமாகவே உள்ளது. அதிகமாகப் பழையவர்கள் தான் வந்து கொண்டுள்ளனர். அவர்களிலும் சிலருக்குப் பாதி நிச்சயம், சிலருக்கு நான்கில் ஒரு பங்கு, சிலருக்கு 10 சதவிகிதம் நிச்சயம் உள்ளது. உண்மையில் பாடசாலையில் முழு நிச்சயம் இல்லாமலோ யாரும் அமர்ந்திருக்க முடியாது. நிச்சயம் இருக்குமானால் நாம் வக்கீலாக ஆவதற்குப் பரீட்சையில் அவசியம் பாஸாக வேண்டும் என்பதைப்

புரிந்து கொண்டிருப்பார்கள். இங்கோ சந்தேக புத்தி உள்ளவர்களும் அமர்ந்துள்ளனர். மனிதரில் இருந்து தேவதை ஆகிறோம் என்று கொஞ்சம்-கொஞ்சமாக நிச்சயம் ஏற்பட்டு விடும் என்று நினைக்கின்றனர். இங்கே நிச்சயம் ஏற்படுவதற்காக அமர்கின்றனர். பிறகு போகப்போக பிரிந்து விடுபட்டுப் போகின்றனர். 4-5 வருடங்கள் படித்துப் படித்துப் பிறகு சந்தேகம் வந்து விடுகிறது என்றால் வெளியேறி விடுகின்றனர். இது மிக உயர்ந்த படிப்பு மற்றும் இதில் மாயா இராவணனின் தடைகள் ஏற்படு கின்றன. மாயா புரிந்து கொள்ள விடுவதில்லை. மாயா குழந்தைகளின் படிப்பில் தடைகளையும் ஏற்படுத்துகின்றது. இந்தப் பாடசாலை மிகவும் அற்புதமான ஒன்றாகும். தில்வாடா கோவிலும் கூட எவ்வளவு நல்ல நினைவுச் சின்னமாக ஆகியுள்ளது! அது ஜடக் கோவில். அதில் காட்டப் பட்டுள்ளவர்கள் சொர்க்கத்தின் ஸ்தாபனைக்காக வாழ்ந்திருந்து சென்றுள்ளார்கள், ஜெகத் அம்பா, ஜெகத் பிதா மற்றும் அவர்களுடைய குழந்தைகள், இவர்களுடைய ஜட நினைவுச் சின்னம் தான் உருவாகின்றது. எப்படி சிவாஜி முதலானவர்கள் அனைவரும் சைதன்யத்தில் இருந்தனர். இப்போது அவர் களுடைய நினைவுச் சின்னங்கள் உள்ளன. இப்போது ஜெகத் அம்பாவும் ஜெகத் பிதாவும் சைதன்யத்தில் வந்துள்ளனர். 5000 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் அதே பாகத்தை நடிப்பார்கள், அவர்களின் சித்திரங்கள் (மனித சரீரமாக) வெளிப்படும். முதலிலோ நிச்சயமாகச் சித்திரங்கள் (சரீரம்) இருக்காது. இந்தச் சித்திரங்கள் முதலியவை அனைத்தும் அழிந்து போகும். பிறகு முதல் சித்திரம் (சரீர அமைப்பு) உருவாகத் தொடங்கும். நினைவுச் சின்னமும் முதல்-முதலில் சிவபாபாவினுடையது தான் உருவாகும். அதன் பிறகு திரிமூர்த்தி பிரம்மா விஷ்ணு சங்கரினுடையது, பிறகு இப்போது நீங்கள் சேவை செய்து கொண்டிருக் கிறீர்கள்-அதனுடைய சித்திரமும் வெளிப்படும். அனைவரும் பதீத-பாவனரை நினைவு செய்கின்றனர்-ஆனால் நாம் தூய்மை இல்லாமல் உள்ளோம் என்று புரிந்து கொள்ளவில்லை. உண்மையில் எதன் மூலம் சத்கதி கிடைக்கிறதோ, அது தான் உண்மையிலும் உண்மையான ஞானமாகும். ஞானமோ குரு மூலமாகக் கிடைக்கும். தண்ணீரின் நதிகள் ஒன்றும் குரு கிடையாது. இதெல்லாம் குருட்டு நம்பிக்கையாகும். தொழில் பற்றித் தெரிந்து கொள்ளாமல் எதையும் அடைய முடியாது. தரிசனம் செய்வேன்......... என்று சொல்வதெல்லாம் தவறானதாகும். தரிசனத்தின் எந்த ஒரு விஷயமும் கிடையாது. இதுவோ யாராவது புதியவரோடு சந்திக்க வேண்டியுள்ளது, ஏனென்றால் பெரியவர்களின் மூலம் (பெரிய சப்தம்) ஞான ஒளி வெளிப்படுகின்றது. ஆனால் பெரியவர்கள் ஞானத்தை வெளிப்படுத்த முடிவதில்லை எனப் பார்க்கப் படுகின்றது. அதை ஏழைகள் செய்ய முடியும். ஆம், யாராவது ஞான செல்வத்தால் செல்வந்தராகி விட்டால் மற்றவர்களுக்கும் கூற முடியும். இந்தத் தண்ணீரின் நதிகளிலோ ஸ்நானம் செய்தே வந்துள்ளனர். இந்த கங்கா ஸ்நானத்தினால் சத்கதி கிடைக்காது. பதீத-பாவனர், சத்கதி அளிக்கும் வள்ளலாக இருப்பவர் ஒரு தந்தை மட்டுமே. அவர் வந்து அனைவருக்கும் சத்கதி அளிக் கிறார். பாபா சொல்கிறார், சத்கதியோ ஒரு விநாடியில் கிடைக்க முடியும். ஸ்ரீமத் சொல்கிறது, என்னை நினைவு செய்வீர்களானால் அந்த் மதி ஸோ கதி ஆகி விடும். இது யோக அக்னி எனச் சொல்லப் படுகின்றது. இதன் மூலம் விகர்மங்கள் விநாசமாகும். அதனால் பாபா சொல்கிறார், என்னை நினைவு செய்வீர்களானால் சதா ஆரோக்கியமானவர்களாக ஆவீர்கள், நான் தான் சொர்க்கத்தை ஸ்தாபனை செய்கிறேன். இந்தச் சக்கரத்தை நினைவு செய்வதால் நீங்கள் சக்கரவர்த்தி ராஜா

ஆகி விடுவீர்கள். தந்தை மற்றும் ஆஸ்தியை நினைவு செய்யுங்கள். இப்போது நீங்கள் வீட்டுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும், பாபாவிடம். கல்ப-கல்பமாக பாபா ஒரே ஒரு தடவை வந்து சத்கதி அளிக்கிறார். நீங்கள் யாருக்கும் சத்கதி அளிக்க முடியாது. சிவபாபா விடமிருந்து இந்த உண்மையிலும் உண்மையான ஞான கங்கைகள் வெளிப்பட்டுள்ளனர். சிவ காசி விஸ்வநாத் கங்கா. இதை அவர்கள் தண்ணீரின் கங்கை எனப் புரிந்து கொண்டுள்ளனர். அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். நீங்கள் யோக யுக்த்தாக தந்தையின் நினைவில் இருப்பீர் களானால் சேவையும் செய்ய முடியும். பற்றற்றவராக, நல்ல யோகினியாக யார் இருக்கிறார் களோ, அவர்கள் முழுமையாகச் சேவை செய்ய முடியும். கடைசியில் உங்களால் அதிக சேவை நடைபெறும். சாதுக்கள் முதலானவர்களுக்கும் நீங்கள் விமோசனம் அளிக்க வேண்டும். அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும், சத்கதி அளிக்கும் வள்ளல் ஒருவர் தான். அவர் தான் சொல்கிறார், இப்போது நீங்கள் என்னை நினைவு செய்வீர்களானால் என்னிடம் வந்து விடுவீர்கள். முக்தியோ ஒரு விநாடியில் கிடைக்க முடியும். நம்பர்வார் புருஷô ர்த்தத்தின் அனுசாரம் தாரணை ஆகின்றது. கருத்துகள் மிக நல்லவை. கருத்துகளும் தாரணை ஆகுமானால் நஷô வும் அதிகரிக்கும்.

பாபா மிகவும் சகஜத்திலும் சகஜமான வழிமுறை சொல்கிறார். பிறகும் கூட சிலர் எழுதுகின்றனர், பாபா, கிருபை செய்யுங்கள். பாபா, சக்தி கொடுங்கள். அப்போது பாபா புரிந்து கொள்கிறார், இது பக்தர்களின் புத்தி என்று. பக்தர்களோ ஏராளமானவர்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் பாடுகின்றனர், பதீத-பாவனா வாருங்கள். அனைவருமே நினைவு செய்கின்றனர். ஓ காட் ஃபாதர் என அழைக்கின்றனர் ஆனால் எதையும் புரிந்து கொள்ளவில்லை. ஆக, இரக்கம், கிருபை பிறகு எப்படிக் கிடைக்கும்? உண்மையில் இவர்கள் திரிமூர்த்தி. மேலே சிவபாபா, பிறகு பிரம்மாகுமார் குமாரிகளோ இங்கே உள்ளனர். ஆண்-பெண் இருவருமே நாங்கள் பிரம்மாகுமார், குமாரிகள் எனச் சொல்கின்றனர். ஆக, இருவரும் சகோதர-சகோதரிகள் ஆகின்றனர். நீங்களும் பிரஜாபிதா பிரம்மாவின் குழந்தைகளாக இருந்தீர்கள். ஆனால் இப்போது இல்லை. அறிந்து கொள்ளவில்லை. பாடவோ செய்கிறீர்கள், பரமபிதா பரமாத்மா பிரம்மாவின் மூலம் மனித சிருஷ்டியைப் படைக் கிறார் என்றால் முதல்-முதலில் பிராமண தர்மம் இருக்கும். எப்போது சிருஷ்டி படைக்கப் படுகிறதோ, அப்போது பிரம்மாகுமார் குமாரிகள் இருப்பார்கள். பிறகு அந்த தர்மத்தின் ஸ்தாபனை நடைபெறும் மற்றும் அநேக தர்மங்கள் விநாசமாகி விடும். இச்சமயம் நீங்கள் பிரம்மாகுமார், குமாரிகளாக இருக்கிறீர்கள். பிறகு தெய்விகக் குமார் குமாரிகளாக ஆவீர்கள். பிறகு ஒரு சமயம் விஷ்ணு குமாராக, சில சமயம் வேறு குமாராக, ஜென்மம் எடுத்து அது போல் ஆகிக் கொண்டே இருக்கிறீர்கள். இப்போது நீங்கள் ஈஸ்வரிய குமார், பிறகு தெய்விகக் குமார்........ பின்னால் பாருங்கள், பெயர்களும் எப்படி-எப்படியெல்லாம் வைக்கின்றனர்! - பஸர்மல், பைகனமல் என்று! சத்யுகத்தில் இது போன்ற பெயர்கள் கிடையாது. இப்போது உங்களுக்கு எப்படிப் பட்ட அழகான பெயர்களை பாபா அனுப்பி வைத்தார்! குழந்தைகள் நீங்கள் இப்போது பாபாவின் கட்டளைப்படி நடைமுறைப் படுத்த வேண்டும். உங்களுடைய வியாபாரமும் எல்லைக்கப்பாற் பட்டது. பெரிய வியாபாரம் செய்தால் 21 பிறவிகளுக்கு பெரிய பதவி கிடைக்கும் - அதிகமாக ஏழைகள், அபலைகள் தான் நல்ல ஆஸ்தி பெறுகிறார்கள். தனவான்கள் பெறுவ தில்லை. தனவான்களில் பிறகும் பெண்கள் கொஞ்சம் பெறுகிறார்கள்.

ஆண்களுக்கோ பணத்தின் மீது மோகம் உள்ளது. எனது-எனது எனச் சொல்லிக் கொண்டே இருக்கின்றனர். லௌகிக் தந்தையின் வாரிசுகளாகவோ ஆண் குழந்தைகள் தான் ஆகின்றனர். இங்கோ பாபா சொல்கிறார், ஆணாயினும் பெண்ணாயினும் இருவருமே ஆஸ்தி பெற முடியும். மாதாக்கள் அதிகமாக ஆஸ்தி பெறுகிறார்கள். அதனால் சக்திகளின் பெயர் பாடப் பட்டுள்ளது. கன்யாக்கள், மாதாக்கள் நல்ல பதவி பெறுகின்றனர். அதனால் தந்தை கன்னையா என்றும் அழைக்கப்படுகிறார்.

இந்த தில்வாடா கோவில் உங்களுடைய முழுமையான நினைவுச் சின்னமாகும். புரிய வைக்கும் போது மிகுந்த நஷ்ô அதிகரிக்க வேண்டும். தீர்த்த ஸ்தலங்களில் இன்னும் அதிக சேவை நடைபெற முடியும். இப்போதோ கருத்துகள் அதிகம் கிடைத்துள்ளன. சத்கதியோ ஞானக்கடல் மூலம் தான் நடைபெறும். தண்ணீரினால் அல்ல. சத்கதி அளிக்கும் வள்ளல் கீதையின் பகவானே ஆவார். நல்லது

இனிமையிலும் இனிமையான தேடிக்கண்டெடுக்கப் பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே!

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) ஞான செல்வத்தில் செல்வந்தர் ஆகி பாபாவின் பெயரைப் புகழ் பெறச் செய்வதற்கான சேவை செய்ய வேண்டும். முழு நிச்சயபுத்தி உள்ளவராக ஆக வேண்டும். எந்த ஒரு விஷயத்திலும் சந்தேகத்தைக் கொண்டுவரக் கூடாது.

2) பாபாவிடமிருந்து முழு ஆஸ்தி பெறுவதற்காக எனது-எனது என்பதில் உள்ள மோகத்தை விட்டுவிட வேண்டும். லௌகிக் ஆஸ்தியின் மீது நஷ்ô வைக்கக் கூடாது.

வரதானம்: ஆசீர்வாதங்களின் ராக்கெட் மூலம் அதீதவேகத்தோடு பறக்கக்கூடிய தடைகளினால் பாதிப்பற்றவர் ஆகுக

தாய்-தந்தை மற்றும் அனைவரது சம்மந்தத்தில் வந்தாலும் ஆசீர்வாதங்கள் என்ற பொக்கிஷங்களினால் தன்னை நிரம்பியவர் ஆக்கிக் கொண்டால் ஒருபொழுதும் முயற்சியில் கடினமக உழைக்க வேண்டியிருக்காது. விஞ்ஞான சாதனங்களில் அனைத்தையும் விட அதிவேக மாக இராக்கெட்டாக இருப்பதை போல சங்கமயுகத்தில் அனைவரையும் விட அதிவேகமாக முன்னேறி பறப்பதற்கான யந்திரம் அதாவது அதையும் விட சிரேஷ்ட இராக்கெட் – அனை வருடைய ஆசீர்வாதங்களாக இருக்கிறது, இதனால் எந்தவொரு தடையும் சிறிதளவு கூட தொட்டு விட முடியாது. இதனால் தடைகளின் பாதிப்பிலிருந்து பாதுகாப்பாக இருந்து விடலாம், யுத்தம் செய்ய வேண்டியிருக்காது.

சுலோகன்: மற்றவர்களுக்கு உதவி செய்யும் உணர்வோடு நிரம்பியவர் ஆவது தான் சிரேஷ்டத்தன்மையின் ஆதாரமாகும்.